**குளச்சல் நகராட்சி**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் **2019–ம்** ஆண்டு டிசம்பர் மாதம் தேதி **( 31.12.2019)** செவ்வாய்க்கிழமை பிற்பகல் **4.00** மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது **.**

கூட்டத்தில் கலந்து கொண்டவர்

திரு.கு.மணி
தனி அலுவலர் / ஆணையாளர்

**பொருள் எண்.**1

இந்நகராட்சி கணினி பிரிவு மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளர் அறை கதவுகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யும் பொருட்டு, 05.12.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.Sam Construction,<br>(Prop)D.Elin sam<br>Udayarvilai | ரூ.5200/- |
| 2. | M/s.Good Shepered construction,<br>(Prop)Deva Harim Sam<br>Udayarvilai | ரூ.5400/- |
| 3. | Thiru.C.Devaraj,<br>Contractor<br>14-16D. Chenamvilai<br>Bethelpuram (P.o) | ரூ.4900/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது. ந.க.எண்.1615-1/2019/இ1

**தீர்மானம் எண்.**2174 **அனுமதிக்கப்பட்டது**.

**பொருள் எண்.**2

இந்நகராட்சியில் ஒப்பந்த பணிகள் மேற்கொண்ட ஒப்பந்ததாரர்களின் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்கள் பெயரில் உள்ள வைப்பு தொகையினை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **இருப்பில் உள்ள வைப்பு தொகை** |
|---|---|---|
| 1 | T.சுகுமாரன் | ரூ.30275/- |
| 2 | T.சுகுமாரன் | ரூ.21700/- |
| 3 | C.சந்திரசேகர் | ரூ.27200/- |
| 4 | C.சந்திரசேகர் | ரூ.14780/- |
| 5 | C.சந்திரசேகர் | ரூ.10600/- |

ந.க.எண்.1016/2019/இ1

**தீர்மானம் எண்.**2175 **அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.3**

இந்நகராட்சியில் பொதுப்பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்த திரு.ஆர்.செல்வமணி முன்னாள் பணி ஆய்வர் நாகர்கோவில் நகராட்சி என்பவர் மீது நகராட்சி நிர்வாக ஆணையரால் தமிழ்நாடு நகராட்சி பணிகள் (ஒழுங்கு) மற்றும் மேல்முறையீடு சட்டம் 1970 8/2-ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையால் அன்னார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதால் 22.04.2019-ல் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது. மேற்படியார் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் முதன்மை செயலர், நகராட்சி நிர்வாக ஆணையர், உள்ளாட்சி நிதி தணிக்கை/ நகராட்சி நிர்வாக ஆணையர்/ நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்/ஆணையர் குளச்சல் நகராட்சி ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)NO.11719 of 2019-க்கு வேண்டி நகராட்சி சார்பாக ஆஜரான வகையில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.10000/- திரு.ஆதி மூல பாண்டியன் நகராட்சி வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.498/2019/சி1

**தீர்மானம் எண்.2176 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் செய்வதற்காக, புனித காணிக்கை மாதா திருத்தலம் அருகில் அமைக்கப்பட்டுள்ள 2 லட்சம் லிட்டர் மற்றும் 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு, வெள்ளிப்பிள்ளையார் கோயில் அருகில் உள்ள இரண்டு ஆழ்துளை கிணறுகளிலிருந்து 10HP மின் மோட்டார் மூலம் குடிநீரேற்றப்பட்டு, இரண்டு நாட்களுக்கு ஒரு முறை என்ற வீதம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வந்த நிலையில் 4" பிவிசி பிரதான குழாயில் உடைவு ஏற்பட்டு, உடைவு ஏற்பட்ட இடத்தை கண்டறியும் பணிகள் நடைபெற்று வந்த போது, துறைமுகத்தெரு பகுதிகளுக்கு குடிநீர் வழங்க இயலவில்லை. எனவே நகராட்சி குடிநீர் லாரி மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டது. இந்நிலையில், கடற்கரை பகுதிகளில் உள்ள மக்கள் அனைத்து தேவைகளுக்கும் நகராட்சி குடிநீரை மட்டுமே நம்பி உள்ளதால், குறுகலான தெருக்களில் உள்ள பொது மக்களுக்கு குடிநீர் கிடைப்பதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டதை தொடர்ந்து, 09.12.2019 அன்று பொதுமக்கள் நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு, உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டதால், பொதுமக்கள் நலன் கருதி, வார்டு எண்.13,14-ல் உள்ள குறுகலான தெருக்களில் க.எண்.15-40,15-58,14-6,14-107 ஆகியவற்றின் அருகில் வாடகை லாரி மூலம் குடிநீர் வினியோகம் செய்யும் பணியினை நகராட்சி சட்ட விதி 15-ன் கீழ் மேற்கொண்டும், அதற்கான செலவினம் ரூ.3000/-ஐ நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் வழங்கப்பட உள்ள விவரம் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1531/2019/இ2

**தீர்மானம் எண்.2177 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.5**

இந்நகராட்சியில் 200 KVA மற்றும் 62.50 KVA ஜெனரேட்டர்களுக்கு தேவையான 3 எண்ணம் 12V-150 AH Self start battery வினியோகம் செய்தல் பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.43,000/-க்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2146 நாள் 30.10.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 12.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/S.Annai Generators, Nagercoil | மதிப்பீட்டை விட 2.72% அதிகம் (ரூ.46998/-) |
| 2. | M/s.R.J.Power Marthandam | மதிப்பீட்டு விகிதம் (ரூ.45750/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.R.J.Power Marthandam நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1269/2017/இ1

**தீர்மானம் எண்.2178 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் ஆகியவற்றில் 17 எண்ணம் மழைநீர் சேகரிப்பு, கட்டமைப்பு நிறுவுதல் பணியினை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.1,50,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் தனது தீர்மானம் எண்.2151 நாள் 30.10.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 12.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.40% அதிகம் (ரூ.1,46,760/-) |
| 2. | திரு.S.ஜாண் றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.07% குறைவு (ரூ.1,45,638/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.s.ஜாண் றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1383/2019/இ1

**தீர்மானம் எண்.2179 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.7**

இந்நகராட்சி கட்டிட இடிபாடு மற்றும் கட்டுமான கழிவுகளை கொட்டுவதற்காக தேர்வு செய்யப்பட்ட இந்திரா காலனி பழைய உரக்கிடங்கில், ஜே.சி.பி இயந்திரத்தை பயன்படுத்தி, குப்பைகளை ஒதுக்கி வைக்கவும், உடைந்த சுற்றுச்சுவர் மற்றும் நுழைவு வாயிலை சரி செய்வதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ-65,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் தனது தீர்மானம் எண்.2152 நாள் 30.10.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 12.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.**S**.ஜாண் றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.73% அதிகம் (ரூ.59,080/-) |
| 2. | திருமதி.**S**.சசிகலா ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.08% குறைவு (ரூ.58,609/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திருமதி.**S**.சசிகலா ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.08% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1323/2019/இ1

**தீர்மானம் எண்.2180 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் பகுதி உரக்கிடங்கில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள Windrows Platform - ன் ஒரு பகுதியில் RRC அமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,40,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் தனது தீர்மானம் எண்.2153 நாள் 30.10.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 12.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திருமதி.s.சசிகலா ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.41% அதிகம் (ரூ.1,36,286/-) |
| 2. | திரு.**S**.ஜாண் றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.06% குறைவு (ரூ.1,35,640/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.**S**.ஜாண் றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது. ந.க.எண்.1384/2019/இ1

**தீர்மானம் எண்.2181 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.9**

இந்நகராட்சி பணியாளர்களின் ஊதியத்தில் 2018-19 ஆம் ஆண்டில் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரி தொகை தொடர்பான விவரங்கள் Online -ல் பதிவு செய்த வகையில் ரூ.4000/- JACOB & JACOB நிறுவனம் மார்த்தாண்டம் அவர்களுக்கு வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1219/2015/பி1

**தீர்மானம் எண்.2182 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.10**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்கள் ஆண்கள்,20, பெண்கள் 14 நபர்களுக்கும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் ஆண்கள்-2, பெண்-1 நபர், தெருவிளக்கு பராமரிப்பு பிரிவில் 2 ஆண்களுக்கும், மகப்பேறு உதவியாளர் மற்றும் மகப்பேறு ஆயா -2 பெண்களுக்கும் மற்றும் ஓட்டுநர் ஆண்கள் -3 நபர்களுக்கும் 2019-2020 ஆம் ஆண்டிற்கான சீருடைகள் நாகர்கோவில் என்டைஸ் விற்பனை நிலைத்திலிருந்து அரசு விதிமுறைப்படி ஒரு நபருக்கு 2 ஜோடி சீருடைகள் வாங்கி வழங்கவும் அதற்கான தையல் கூலி வழங்கவும் உத்தேச செலவுத் தொகை ரூ.12,0000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.3027/2010/எச்1

**தீர்மானம் எண்.2183 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.11**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 75 K 6526 - ல் 3 டயர்களில் பட்டன் தேய்ந்து, வாகனத்தை இயக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தில் கடந்த 10.03.2016-ல் மாட்டப்பட்ட டயர்கள், 56000 கிலோ மீட்டருக்கு மேல் ஓடியுள்ளது. மேலும் மேற்படி வாகனம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருவதால், பழுதடைந்த 3 டயர்களுக்கு மாற்றாக புதிதாக 3 டயர்கள் வாங்கி பொருத்தும் பணியினை, M/s.Chockalingam Nadar Tyre zone, Marthandam நிறுவனம் மூலம் மேற்கொள்வதற்கும், அதற்கான செலவினம் ரூ.23,200/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.7057-1/2010/எச்1

**தீர்மானம் எண்.2184 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.12**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 75 K 6526 - ல் 3 கீழ்காணும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1. டிங்கரிங் மற்றும் பெயிண்டிங் பணிகள்
2. இன்ஜின் ஆயில் மாற்றுதல்
3. ஆயில் மற்றும் டீசல் பில்டர்கள் மாற்றுதல்
4. அனைத்து பெல்ட்களும் மாற்றுதல்
5. குளிர்விக்கும் ஆயில் மாற்றுதல்
6. ஹாரன் பிரேக் லிவர் மாற்றுதல்
7. டிங்கர் வீல் செய்து கிரீஸ் அடித்தல்
8. நான்கு வீல்களில் கிரீஸ் பேக்கிங் செய்தல்.
9. Joint Star இரண்டும் மாற்றுதல்.

மேற்காணும் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால், வாகனம் சீராக இயக்க இயலாத நிலை உள்ளது. மேலும் அலுவலக பணிகளுக்கு மேற்படி வாகனம் அதிகமாக பயன்பாட்டில் உள்ள காரணத்தால், மேற்படி பழுதுகளை சரி செய்வது மிகவும் அவசியமானதாகும். எனவே ஈப்பு வாகன பராமரிப்பு பணிகளை மேற்கொளவ்தற்காக வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை ஆய்வு செய்ததன் அடிப்படையில் M/s.Mathava Motors, Vellamadam நிறுவனம் அளித்துள்ள ரூ.49,701/-க்கான விலைப்புள்ளியை ஏற்று, மேற்படி நிறுவனம் மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.7057-1/2010/எச்1

**தீர்மானம் எண்.2185 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.13**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள DBC பணியாளர்கள் சுய உதவிகுழுக்கள் மூலம் பணியமர்த்த அக்டோபர் 2019 முதல் டிசம்பர் 2019 வரை 89 நாட்களுக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2144 நாள் 30.09.2019-ல் ஒப்புதல் பெற்று பணியமர்த்தப்பட்டது. மேலும் 17 DBC பணியாளர்களை ஜனவரி 2020 முதல் மார்ச் 2020 வரை 89 நாட்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ2/194/2016 நாள் 11.02.2018-ல் தெரிவித்துள்ள தினக்கூலி பட்டியலின்படி 89 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.38,0000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1182/2017/எச்1

**தீர்மானம் எண்.2186 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.14**

ஓகிபுயலால் பாதிக்கப்பட்ட இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு.மாதவராஜ்குமாருக்கு முன்பணமாக தொகை ரூ.150000/- வழங்கப்பட்டது. ஒகி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முறிந்த மரக்கிளைகளை பொக்லைன் இயந்திரம் Tipper lorry மூலம் அகற்றியமைக்கும், பெரிய மரக்கிளைகளை மரம் அறுக்கும் இயந்திரம் மூலம் அகற்றியமைக்கும் மின்சாரம் துண்டிப்பு பகுதிகளில் ஜெனரேட்டர் வாடகைக்கு எடுத்து பயன்படுத்தியமைக்கும், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கியமைக்கும் தொகை ரூ.176100/- செலவிடப்பட்டதாக பட்டியல்

சமர்ப்பித்துள்ளார். பட்டியல்படி முன்பணம் தொகை ரூ.150000/- ஈடு செய்யவும். மீதமுள்ள தெகை ரூ.26100/- வழங்கியமைக்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2023/2017/எச்1

**தீர்மானம் எண்.2187 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.14**

இந்நகராட்சி திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தை தினகரன் நாளிதழின் தொழில் மலர் 2019-ல் வெளியிட்ட வகையில் ரூ.9,975/-ஐ வழங்க கேட்டு KAL PUBLICATIONS (P) LTD., Nagercoil நிறுவனத்திடமிருந்து பட்டியல் எண்.3300187415 நாள் 07.10.2019 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2045/2012/இ1

**தீர்மானம் எண்.2188 அனுமதிக்கப்பட்டது**